# இரட்சண்யத்தைக் கண்டேன்

வாழ்க்கையை வளமாக்கும்
வல்லமையான தேவ செய்திகள்



J. சாம் ஜெபத்துரை

## இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வழியில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

**WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599**

**Email: wordofgod@wordofgod.in**

## *Wishing you in the mighty name of Jesus Christ*

*We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.*

*95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.*

**WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599**

**Email: wordofgod@wordofgod.in**

# இரட்சணியத்தைக் கண்டேன்!

(SEEN THE SALVATION)

J. சாம் ஜெபத்துரை

A. Devaraj Pitchaimoni, M.Sc., M.Phil.,
Municipal Women Children
Hospital Quarters
Tirunelveli - 627 006.
Tamil Nadu

வெளியிடுபவர்
J. சாம் ஜெபத்துரை
50, ரெயில்வே ஸ்டேஷன் ரோடு
கோடம்பாக்கம், சென்னை - 600 024.

முதற்பதிப்பு : ஜனவரி 1993
நன்கொடை ரூ. 5/-
வெளியீடு எண் : 318

இந்த புத்தகத்தை வெளியிட உதவி செய்தவர்களை வாழ்த்துகிறோம், ஆசீர்வதிக்கிறோம்.

**Mrs S Isabel, & Family**
**Tuticorin-2**

கர்த்தர் சீயோனிலிருந்து அவர்களை ஆசீர்வதிப்பாராக.

அச்சிட்டோர்:
ஒரேப் ஆர்ட் பிரிண்டர்ஸ்
50, ரெயில்வே ஸ்டேஷன் ரோடு
கோடம்பாக்கம், சென்னை - 600 024.

# இரட்சணியத்தைக் கண்டேன்!

பரிசுத்த லூக்கா எழுதிய சுவிசேஷம் 2-ம் அதிகாரம் 25-ம் வசனத்திலிருந்து 32-ம் வசனம் வரையிலும் வாசிப்போமா?

"அப்பொழுது சிமியோன் என்னும் பேர் கொண்ட ஒரு மனுஷன் எருசலேமில் இருந்தான்; அவன் நீதியும் தேவபக்தியும் உள்ளவனும், இஸ்ரவேலின் ஆறுதல் வரக் காத்திருக்கிறவனுமாயும் இருந்தான்; அவன்மேல் பரிசுத்த ஆவி இருந்தார்.

கர்த்தருடைய கிறிஸ்துவை நீ காணுமுன்னே மரணமடையமாட்டாய் என்று பரிசுத்த ஆவியினாலே அவனுக்கு அறிவிக்கப்பட்டுமிருந்தது. அவன் ஆவியின் ஏவுதலினால் தேவாலயத்திலே வந்திருந்தான்.

இயேசு என்னும் பிள்ளைக்காக நியாயப்பிரமாண முறைமையின்படி செய்வதற்குத் தாய் தகப்பன்மார் அவரை உள்ளே கொண்டு வருகையில், அவன் அவரைத் தன் கைகளில் ஏந்திக்கொண்டு தேவனை ஸ்தோத்தரித்து;

ஆண்டவரே, உமது வார்த்தையின்படி உமது அடியேனை இப்பொழுது சமாதானத்தோடே போகவிடுகிறீர்; புறஜாதிகளுக்குப் பிரகாசிக்கிற ஒளியாகவும், உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு மகிமையாகவும், தேவரீர் சகல ஜனங்களுக்கும் முன்பாக ஆயத்தம்பண்ணின உம்முடைய இரட்சணியத்தை என் கண்கள் கண்டது என்றான்" (லூக் 2:25-32)

கிறிஸ்மஸின் மேன்மை என்ன? இரட்சகரை கண் குளிரக் காண்பதுதான் கிறிஸ்மஸ். யாருடைய உள்ளத்தில் கிறிஸ்து பிறந்திருக்கிறாரோ அவர்களுக்கு ஒவ்வொரு நாளும் கிறிஸ்மஸ்!

கிறிஸ்மஸ் நேரத்தில் கிறிஸ்துவைக் காணாமல் கொண்டாட்டங்களைக் காணும்போது ஏமாற்றமும் துயரமும் தான் உள்ளத்தில் மிஞ்சும். ஆனால் கிறிஸ்மஸ் நாளில் கிறிஸ்துவைக் காண நாம் உள்ளத்தைத் திறப்போம் என்றால் நம் உள்ளத்தில் நீங்காத சந்தோஷம் உண்டாகும்.

இப்பொழுது நாம் கிறிஸ்துவை பாலகனாய்க் காண்கிறோம். ஆனால் மிகவிரைவில் மகிமையின் ராஜாவாய் காண்போம்.

ஆண்டவருடைய பிறப்பாகிய கிறிஸ்மஸை நாம் நினைவுகூரும்போதெல்லாம் நம் அருமை ஆண்டவருடைய இரண்டாவது வருகையைக் குறித்து நாம் எண்ணாமல் இருக்கவே முடியாது. இயேசுவினுடைய முதலாம் வருகை பாலகனாய் வந்த வருகை. ஆனால் இனிமேல் இயேசுகிறிஸ்து வருவதோ ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தருமாய், மகிமையின் தேவனாய் வருவார் ஒவ்வொரு கிறிஸ்மஸ் செய்தியின் நேரங்களிலும் கிறிஸ்துவினுடைய இரண்டாவது வருகைக்கு நாம் ஆயத்தப்படுவோமாக!

## நெப்போலியனின் பாலகன்!

பிரான்ஸ் தேசத்தில் மிக புகழ் பெற்ற சக்கரவர்த்தியாய் இருந்த நெப்போலியனைக் குறித்து அறிந்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். மனைவியின் பிரசவத்தில் பிறக்கப்போகும் முதல் குழந்தையை பிரான்ஸ் தேசமே ஆவலுடன் எதிர்பார்த்தது!

தேசத்தின் மக்கள் தன்னுடைய குழந்தை பிறக் இறதை கொண்டாடும்படி ஒரு விசேஷ ஏற்பாட்டை செய்தார். பெண் குழந்தை பிறக்கும் என்ருல் பீரங்கி யில் இருபத்தியொரு வெடி குண்டுகள் முழங்கும் என்றும், ஆண் குழந்தை பிறந்தது என்ருல் நூறு வெடி குண்டுகள் முழங்கும் என்றும் அறிவித்திருந்தார்.

அப்படி பிறப்பது ஆண் குழந்தையாய் இருந்தால் அது பிரான்ஸ் தேசத்தையே அரசாளும் இளவரசனய் இருக்குமாகையால் ஜனங்கள் மிகுந்த ஆவலோடு குழந்தை பிறக்கும் செய்திக்காக காத்துக் கொண்டிருந் தார்கள்.

திடீரென்று பீரங்கி முழங்க ஆரம்பித்தது. முதற் குண்டு முழங்கியதுமே அங்குள்ள ஜனங்கள் எல்லாரும் மிக ஆர்வத்தோடும் விறுவிறுப்போடும் எண்ண ஆரம்பித் தார்கள். இருபத்தியொரு குண்டுகள் முழங்கியதும் சற்று இடைவெளி வந்தது.

பெண் குழந்தைதான் என்று எண்ணிக் கொண்டி ருக்கும்போதே இருபத்தி இரண்டாவது குண்டின் சத்தம் கேட்டது. தொடர்ந்து நூறு குண்டுகள் முழங்கிய முழக் கத்தால் பாரீஸ் நகரமே விழாக்கோலம் பூண்டது.

புதிய இளம் சக்கரவர்த்தி பிறந்துவிட்டார் என்று ஆடிப்பாடி மகிழ்ந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. எவ் வளவு விருந்து, எவ்வளவு கொண்டாட்டம், எவ்வளவு நடனம்!

ஆனல் அன்றைய சரித்திரத்தில் நெப்போலியனின் மகனைக் குறித்து எந்த விவரமும் இல்லை. சில ஆண்டுகளுக் குள் நெப்போலியன் தோல்வியுற்று சிறையில் அடைக்கப்

பட்டார் நூறு பீரங்கிகள் முழங்கி பிறந்த அந்தபால கனைப் பற்றி அதற்கு பின்பு எந்த தகவலும் இல்லை.

ஆனால் இயேசுகிறிஸ்துவைப் பாருங்கள். சத்திரத்தில் கூட இடம் இல்லாத அவருக்கோ சரித்திரத்தில் மேன்மை யான இடம் கிடைத்தது. அறியப்படாதவராய் பிறந்த அவரை இன்று அறியாதவர்களே இல்லை.

பெத்லகேமின் சிறிய மாட்டு கொட்டகையில் ஏழ்மை யான நிலைமையில் பிறந்த அவரைப் பாருங்கள்! எத்தனை எளிய சூழ்நிலை! எந்த ஆர்ப்பரிப்பும் இல்லாமல் பிறந் திருக்கிறார்.

## எட்டாம் நாளிலே ..!

இயேசு பிறந்து எட்டு நாட்களாகிவிட்ட பிறகு நடந்த ஒரு சம்பவத்திற்கு நேராக உங்களுடைய சிந்தனை களைத் திருப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

பொதுவாக இஸ்ரவேல் தேசத்திலே ஒரு குழந்தை பிறந்து எட்டு நாட்களாகும்போது அந்த குழந்தைக்கு விருத்தசேதனம் செய்ய வேண்டும். அப்பொழுது அந்த குழந்தைக்கு பெயரிடுவார்கள்.

மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படியே அவரு டைய சுத்திகரிப்பின் நாட்கள் நிறைவேறினபோது யோசேப்பும், இயேசுவின் தாயாகிய மரியாளும் குழந்தை யைத் தூக்கிக்கொண்டு எருசலேம் தேவாலயத்திற்குள் கடந்து வந்தார்கள். அவர்கள் கைகளிலே ஸ்தோத்திர காணிக்கையாக செலுத்துவதற்கு ஒரு ஜோடி காட்டுபுறா இருந்தது.

தேவாலயத்திற்குள் வருகிற இயேசுவைப் பாருங்கள் அந்த தேவாலயம் மிகப்பெரிய தேவாலயம். மிக உயர

மான மேன்மையான தேவாலயமாய் காட்சி அளித்திருக்கும் ஏனென்றால் அந்த தேவாலயம் ஏரோது ராஜாவினால் நாற்பத்தாறு ஆண்டுகளாய் கட்டப்பட்டது

மரியாள் தன் கைகளில் அறியப்படாத ஒரு பாலகனை இயேசுவை துணியிலே சுற்றிக்கொண்டு தேவாலயத்திற்குள் தூக்கிக் கொண்டு வருகிறாள். பக்கத்திலே யோசேப்பு நடந்து வருகிறார்.

## அறியப்படாத பாலகன்!

அந்த பெரிய தேவாலயத்திலே ஏராளமான ஆசாரியர்கள் பணியாற்றி இருந்திருக்கக்கூடும். ஏராளம் தீர்க்கதரிசிகள் அங்கே இருந்திருக்கக்கூடும் ஏராளமான பக்திமான்களும், பரிசேயரும், சதுசேயரும், வேதபாரகரும் இருந்திருக்கக்கூடும். ஆனால் அவர்களில் யாருமே இயேசுவை வரவேற்கவில்லை. இயேசுவை அடையாளம் கண்டு கொள்ளவும் முடியவில்லை.

பல வேளைகளில் பெற்றோர் தங்கள் சிறு குழந்தைகளை ஆசீர்வதித்து பிரதிஷ்டை செய்யும்படி ஆலயத்திற்கு கொண்டு வருவதை பல முறை பார்த்திருக்கிறேன். அழகான பஞ்சு டர்கி டவலிலே குழந்தையை பொதிந்துக் கொண்டு வந்து ஊழியர்களுடைய கைகளிலே கொடுப்பார்கள் ஊழியர்கள் அந்த குழந்தையை கர்த்தருடைய நாமத்தினாலே ஆசீர்வதிப்பார்கள். அந்த காட்சி மிக மேன்மையாய் இருக்கும்.

ஆனால் ஏழை குடும்பத்தில் பிறந்த மரியாளுக்கோ குழந்தை சுற்றுவதற்கு அழகான பல நிறமான டர்கி டவல் கிடைக்காமல் இருந்திருக்கக்கூடும். பழைய கிழிந்த கந்தல் புடவையிலே இயேசுவைச் சுற்றிக்கொண்டு ஏழ்மையான நிலைமையில் மரியாள் நிற்கிறாள் அப்பொழுது இயேசுவை ஏந்துவதற்கோ தூக்குவதற்கோ ஆட்கள் இல்லாமல் இருந்தது.

யார் இந்த இயேசு? உலகத்தாரால் ஏறக்குறைய நான்காயிரம் ஆண்டுகளாய் எதிர்பார்க்கப்பட்ட தேவ குமாரன் அவர். உலகத்தோற்றத்திற்கு முன்பாகவே பிதாவினால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆட்டுக்குட்டியானவர். பழைய ஏறபாட்டு புதிய ஏற்பாட்டு பரிசுத்தவான்களால் ஆவலோடு எதிர்பார்க்கப்பட்டவர்.

ஆனால் அந்த ஆலயத்தின் மக்களோ அவரைக் குறித்து அறியாதிருந்தார்கள். ஆயத்திலுள்ள ஏராளமான மக்களுக்குள் இயேசுகிறிஸ்துவை அடையாளம் கண்டு கொண்டவர்கள் இரண்டே இரண்டு பேர்தான். ஒருவருடைய பெயர் சிமியோன். அடுத்தவருடைய பெயர் அன்னாள். இரண்டு பேரும் வயது முதிர்ந்தவர்களாக இருந்தார்கள். ஆனாலும் அவரைக் கண்டபோது வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பேசியா அவர் என்பதை புரிந்துகொண்டார்கள்.

## மாறுவேடம் பூண்ட ராஜா!

ஒருமுறை ஒரு ராஜா மாறுவேடம் பூண்டு ஒரு ஏழை குடியானவனைப்போல பட்டணத்தை சுற்றிப்பார்க்க வந்தார். மக்களுடைய உண்மை நிலையை அறிந்துகொள்ள வேண்டுமென்று அவருக்கு ஆவல் வந்தது. பகல் எல்லாம் பல இடங்களை சுற்றிவிட்டு களைப்படைந்தவராய் இரவு வேளைகளில் பயணிகள் தங்குகிற ஒரு பெரிய லாட்ஜிக்குள் வந்தார்.

அங்கே பெரிய பெரிய அரசாங்க அதிகாரிகளும், மந்திரிகளும் தங்கி இருந்தார்கள். அந்த இடத்தின் சொந்தக்காரனோ ஏழை குடியானவனைப் பார்த்ததும் தனக்கு கௌரவ குறைவு என்று விரட்டி விரட்டி அடித்தான். ஆனால் குடியானவனோ கெஞ்சி எவ்வளவு பணம் வேண்டுமென்றாலும் நான் தருகிறேன். இந்த இரவிலே நான் தங்கியிருந்து நாளைக்கு பிரயாணப்பட வேண்டுமென்று கெஞ்சி கேட்டான். அதற்கு அந்த முதலாளி அவரை விரட்டி, “வேறு எங்கேயாவது போ; இங்கே

அரசாங்க அதிகாரிகள் தங்கியிருக்கிறார்கள், உனக்கு இடம் இல்லை'' என்று முகத்தில் அறைவதைப்போல சொல்லிவிட்டான்.

அந்த சம்பாஷணையை கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த ஒரு அதிகாரி வேகமாய் ஓடிவந்து அவரின் கால்களில் விழுந்து, ராஜாவே நீங்கள் இவ்வளவு திறமையாய் மாறுவேடம் பூண்டிருக்கிறீர்கள். ஆனாலும் உங்களுடைய குரல் ராஜ குரலாக கெம்பீரமாய் இருப்பதினால் உங்களை அடையாளம் காட்டிவிட்டது என்று சொல்லி பணிந்து கொண்டார்.

ராஜாவின் சத்தத்தில் கண்ணும் கருத்துமாய் இருந்த அந்த அதிகாரியை ராஜா மிகவும் அதிகமாய் உயர்த்தினான்.

ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவும், தேவாதி தேவனுமான இயேசுகிறிஸ்து கூட இந்த பூமிக்கு வரும் போது மாறுவேடத்தில்தான் வந்தார் தேவகுமாரனான அவர் மனுஷகுமாரனைப்போல மாறுவேடம் பூண்டிருந்தார்

அவர் தமக்கு சொந்தமானதில் வந்தார். ஆனால் அவர்களுடைய சொந்தக்காரரோ அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. எருசலேம் தேவாலயத்தில் அவர் கடந்து வந்தபோது அங்கிருந்த பெரும்பான்மையானவரால் அடையாளம் கண்டு பிடிக்க முடியவில்லை.

## அந்த சிமியோன்!

அப்பொழுது வயது முதிர்ந்த சிமியோன் இயேசு பாலகனுக்கு நேராய் வேகமாய் ஓடி வருகிறார். வயது முதிர்ந்த அவருடைய முகத்தில் எத்தனை பிரகாசம்! எத்தனை மகிமை! ஆம் சிமியோன் இயேசுவை அடையாளம் கண்டுகொண்டார்.

ஏனென்றால் அந்த தேவாலயத்திற்கு சிமியோன் தேவ ஆவியானவரால் ஏவப்பட்டு வந்திருந்தார். சிமியோன் மேல் பரிசுத்த ஆவியானவர் இருந்தார். கிறிஸ்துவை காணும்முன்னே நீ மரணம் அடையமாட்டாய் என்று பரிசுத்த ஆவியானவரால் அவருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

இயேசுவைக் கண்டவுடன் தன்னுடைய கைகளை மரியாளுக்கு நேராய் நீட்டி குழந்தையை என் கைகளில் தாருங்கள் குழந்தையை நான் பார்க்கட்டும் என்று ஆவலோடு கேட்கிறார்.

சிமியோனுக்கு இருந்த ஆர்வத்தைக் கண்ட மரியாள் இயேசு கிறிஸ்துவாகிய குழந்தையை சிமியோன் கைகளில் கொடுத்தாள். குழந்தையை கைகளில் வாங்கிய உடனே சிமியோனுடைய உள்ளம் பூரித்தது. தேவனுடைய ஆவியானவர் சிமியோனை நிரப்பினார். அவருடைய உள்ளத்திலிருந்து ஒரு துதியின் சத்தம், ஸ்தோத்திரத்தின் சத்தம் மாத்திரமல்ல, தீர்க்கதரிசன சத்தம் வெளி வந்தது.

சிமியோன் தேவனை ஸ்தோத்தரித்தார். ஆண்டவரே உம்முடைய இரட்சணியத்தை நான் காணும்படி உதவி செய்தீரே உமக்கு ஸ்தோத்திரம், இனி நான் சமாதானத்தோடு கடந்து போகவும் ஆயத்தமாயிருக்கிறேன். அது மாத்திரமல்ல இயேசு கிறிஸ்துவை ஆசீர்வதிக்க ஆரம்பித்தார்.

சிமியோன் சொன்ன தீர்க்கதரிசன வார்த்தையை சற்று கவனித்துப்பாருங்கள். ''புறஜாதிகளுக்குப் பிரகாசிக்கிற ஒளியாகவும், உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு மகிமையாகவும், தேவரீர் சகல ஜனங்களுக்கும் முன்பாக ஆயத்தம்பண்ணின உம்முடைய இரட்சணியத்தை என் கண்கள் கண்டது என்றான்''

(லூக் 2:30, 31,32).

## என் கண்கள் கண்டது!

சிமியோன் அந்தக் குழந்தையை நோக்கிப் பார்க்கிறார். அந்த சின்னஞ் சிறு பாலகன் தன் பிஞ்சு கரங்களையும் கால்களையும் அழகாய் அசைத்துக் கொண்டு படுத்துக்கொண்டிருக்கிறது. சுட்டி பயலாய் வருவான் என்கிறார்கள் அருகில் உள்ளவர்கள் ஆம், அந்த பாலகன் சுட்டி பையன்தான். சரித்திரத்தை இரண்டாய் பிளந்து விட்டான் ஆம் அந்த பாலகன் சுட்டி பயல்தான். இந்த சுட்டி பயல் வளர்ந்து சாத்தானின் தலையை நசுக்கிவிடப் போகிறானே, முழு உலகத்திற்கும் ஜீவனைக் கொடுக்கப் போகிறாரே, கல்லறையை திறந்து உயிருள்ளவராக எழுந்திருக்கப்போகிறாரே அவன் சுட்டி பயல்தான்

இவனுடைய முகசாயல் யாரைப் போலிருக்கிறது என்று சூழ இருந்த பாட்டிமார் பேசிக்கொள்ளுகிறார்கள். தாயின் முக சாயலும் இல்லை. யோசேப்பின் முக சாயலும் இல்லை இந்த பாலகன் பிதாவினுடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமாய் இருந்து சரித்திரத்தையே தம்முடைய வல்லமையுள்ள வாக்கினாலே மாற்றுவது யாருக்குத் தெரியும்?

அந்த புரட்சி பாலகனை கைகளில் ஏந்திய சிமியோன் இரட்சணியத்தை என் கண்கள் கண்டது என்று மகிழ்ந்தார். கைகளில் இயேசுவை ஏந்திக் கொண்டிருக்கிற அந்த சிமியோனைப் பாருங்கள்! அந்த கண்கொள்ளா காட்சியை சிந்தித்துப் பாருங்கள்!

## காணிக்கையும், அரிசியும்!

சில ஆண்டுகளுக்கு முன்பு வண்ணார்பேட்டையிலுள்ள ஒரு பெரிய தேவாலயத்தில் பேசும்படி அழைக்கப்பட்டிருந்தேன். பிரசங்கம் முடிந்ததும் அந்த சபையின் போதகர் ஒரு கவரில் காணிக்கை போட்டு என் கைகளில் கொடுத்தார். அந்த காணிக்கையை என் கைகளில் வாங்கிய

உடனே எனக்குள்ளே ஆவியானவருடைய ஒரு ஏவுதல் வந்தது.

இந்த காணிக்கையை எடுத்துக்கொண்டு குறிப்பிட்ட இடத்திற்கு போ. அங்கே போகும்போது ஒரு ஊழியக்காரர் இருப்பார். அந்த பணத்திற்கு அரிசி வாங்கிக் கொண்டு போ என்று சொல்லி என் உள்ளத்தில் உணர்வு ஏற்பட்டது.

எனக்குக் கிடைத்த கவரை திறந்து பார்த்தேன் உள்ளே பத்து ருபாய் நோட்டு இருந்தது. அதை எடுத்துக் கொண்டுபோய் கடையிலே அரிசி வாங்கிக் கொண்டு போய் ஆண்டவர் காண்பித்த அந்த ஊழியருடைய ஆலயத்தை நோக்கி சென்றேன்.

அப்போதுதான் அவர் ஞாயிற்றுக்கிழமை ஆராதனையை முடித்துவிட்டு அவருக்குக் கிடைத்த கொஞ்ச காணிக்கையையும் சபையிலுள்ள ஏழை விசுவாசிகளுக்கு பகிர்ந்து கொடுத்துவிட்டு மத்தியானம் சாப்பிட ஒன்றுமில்லாமல் முழங்கால்படியிட்டு ஜெபித்துக் கொண்டிருந்தார்.

ஆனால் அவருக்குள் ஒரு விசுவாசம் இருந்தது. ஆகவே அவர் என்ன செய்தார்? தன்னுடைய ஸ்டவ்வை பற்ற வைத்து அதிலே தண்ணீரை ஊற்றி கொதிக்க வைத்து ஆண்டவர் அரிசி அனுப்புவார் என்று விசுவாசத்துடன் ஜெபித்துக் கொண்டிருந்தார்.

நான் அவரிடத்தில் அரிசி நிரம்பிய அந்த பையைக் கொடுத்தேன். உள்ளே என்ன இருக்கிறது என்று கேட்டார். அரிசி இருக்கிறது என்று சொன்னேன்.

அவருக்கிருந்த சந்தோஷம் தாங்க முடியவில்லை. சகோதரனே, நீங்கள் ஒருவேளை பணமாக எனக்குக் கொடுத்திருந்தால் நான் பையை எடுத்துக்கொண்டு அரிசி வாங்க வேண்டியது இருக்கும். ஆனால் ஆண்டவர்

நோத்தை மிச்சப்படுத்துவதற்காகவும் நான் பசியாய் இருக்கிறேன் என்பதற்காகவும் உங்கள் மூலமாக அரிசியாக கொடுத்து அனுப்பியிருக்கிறார் என்றார்.

பாருங்கள் அந்த அரிசிபையை அவர் கைகளில் வாங்கியபோது அவருக்கு எவ்வளவு பெரிய சந்தோஷம். ஆண்டவர் என் ஜெபத்தைக் கேட்கிறார். என் ஜெபத்திற்கு பதில் அளிக்கிறார் என்று கர்த்தரை துதித்துவிட்டு என்னை மகிழ்ச்சியோடு ஆசீர்வதித்தார்

## சந்தோஷம் பொங்குதே!

அரிசியை கைகளில் வாங்கியபோது அவருக்கு அத்தனை சந்தோஷம் இருநதிருக்கும் என்றால் இயேசு கிறிஸ்து பாலகனை தன்னுடைய கைகளில் ஏந்தியபோது சிமியோனுக்கு எவ்வளவு அதிக சந்தோஷம் இருந்திருக்கும்! வானத்தை வானங்களை உண்டுபண்ணினவரை சிறு பாலகனை கைகளில் ஏந்தியபோது அவருடைய உள்ளம் எவ்வளவு மகிழ்ந்திருக்கும்! வானம் எனக்குச் சிங்காசனம் பூமி எனக்கு பாதபடி என்ற அந்த மகிமையின் ராஜாவை கைகளில் ஏந்தியது எத்தனை பெரிய பாக்கியம்!

இதோ, இவரே நம்முடைய தேவன்; இவருக்காகக் காத்திருந்தோம், இவர் நம்மை இரட்சிப்பார்; இவரே கர்த்தர், இவருக்காகக் காத்திருந்தோம்; இவருடைய இரட்சிப்பினால் களிகூர்ந்து மகிழுவோம் (ஏசா 25:9).

சிமியோன் இயேசுவை கைகளிலே ஏந்தி வரலாற்றை திரும்பி பார்த்து இருந்திருப்பார்! எத்தனை ராஜாக்கள் இயேசுவைக் காண வேண்டுமென்று எண்ணி இருந்தார்கள்! எத்தனை தீர்க்கதரிசிகள், எத்தனை ஆசாரியர்கள் இயேசுவை கைகளிலே ஏந்த மிகுந்த ஆவல் கொண்டிருந்தார்கள்! ஆனால் அவர்களுக்குக் கிடைக்காத பாக்கியம் எனக்குக் கிடைத்ததே! இரட்சணியத்தை என் கண்கள் கண்டதே என்று அவர் பூரித்தார்.

சிமியோன் இரட்சணியமான இயேசுவை தன் கைகளிலே ஏந்தியிருப்பதை மனக்கண்களுக்கு முன்பாக கொண்டு வந்து பாருங்கள். ஒலிம்பிக் விளையாட்டு போட்டியில் அவர் வெற்றி பெற்றதைப்போன்ற மகிழ்ச்சி ஏற்பட்டு இருந்திருக்கும். பரிசு கோப்பையை வாங்க வெற்றி மேடையை நோக்கி நடந்து ஆயிரம் கேமிராக்கள் பளிச்சிடும்போது வெற்றி கோப்பையை கைகளில் ஏந்தும் மகிழ்ச்சி ஏற்பட்டிருந்திருக்கும்! இரட்சணியத்தை என் கண்கள் கண்டதே என்று ஆனந்த கூத்தாடினார்!

ஆதாம் முதல் பழைய ஏற்பாட்டு காலம் முடிய வாழ்ந்த பரிசுத்தவான்களுக்குக் கிடைக்காத பாக்கியத்தை கர்த்தர் சிமியோனுக்குக் கொடுத்தாரே! மேசியாவாகிய இரட்சகரை காணும் பாக்கியத்தைக் கொடுத்தாரே! எத்தனை மகிழ்ச்சி! சகோதரனே, சகோதரியே, உங்களுக்குள் அந்த சந்தோஷம் இருக்கிறதா? உங்களுடைய உள்ளம் இயேசு கிறிஸ்துவை ஏந்துவதாய் இருக்கிறதா? கிறிஸ்து உங்களில் பிறந்திருக்கிறாரா?

## பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள்!

கிறிஸ்து பிறப்பைக் குறித்து முதல்முறை தீர்க்கதரிசனம் உரைத்தது பிதாவாகிய தேவன்தான். ஆதாம் ஏவாளுக்கு இந்த இரட்சணியத்தை அவர் வாக்குப்பண்ணினார். ஸ்திரீயின் கர்ப்பப்பிறப்பானவர் சர்ப்பத்தின் தலையை நசுக்குவார். சர்ப்பத்தின் பிடியிலிருந்தும். சாப பிடியிலிருந்தும், வியாதிகளிலிருந்தும் மரணத்திலிருந்தும் விடுவிக்கிற இரட்சகர் பூமியில் தோன்றுவார் என்று வாக்களித்தார்

நான் நினைக்கிறேன் ஆதாம் ஏவாள் எல்லாரும் தங்களுடைய வாழ்நாளெல்லாம் அந்த இரட்சணியத்தைக் காண ஏங்கி இருந்திருப்பார்கள். மறுபடியும் ஏதேனாகிய சந்தோஷத்திற்குள் பிரவேசிக்கிற காலம் வராதா என்று தவித்து இருந்திருப்பார்கள். முதலாம் ஆதாமாகிய நான்

பாவத்திற்குள் விழுந்தேனே இரண்டாம் ஆதாமாகிய அந்த இரட்சகர் என்னுடைய நாட்களில் மறுபடியும் வந்து எனக்கு இரட்சிப்பை கொடுக்கமாட்டாரா என் றெல்லாம் எண்ணி இருந்திருப்பார். ஆனால் இயேசுவோ ஆதாமின் நாட்களில் வரவில்லை.

ஒரு வேளை நோவா தன்னுடைய நாட்களில் இயேசு பிறப்பார் என்று எண்ணி இருந்திருக்கக்கூடும் தன்னுடைய குடும்பத்தைக் காக்க இரட்சிப்பின் பேழையை உண்டு பண்ணினவர் அவர் அல்லவா. அது போலவே தன்னுடைய குடும்பத்திற்காக அந்த இரட் சகர் தன்னுடைய நாட்களில் தோன்றுவார் என்று எண்ணி இருந்திருக்கக்கூடும். நோவாவின் பேழையின் ஒவ்வொரு பகுதியும் இரட்சகரான இயேசுவுக்கு நிழ லாட்டமாய் இருந்தது. ஆனாலும் இயேசு நோவாவின் நாட்களில் பிறக்கவில்லை.

விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாம் இயேசுவின் நாட்களைக் காண வாஞ்சையாய் இருந்திருக்கக்கூடும் காரணம் கர்த்தர் ஆபிரகாமின் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப் போல பெருகப் பண்ணுவேன் என்று வாக்குப் பண்ணியிருந்தார். ஆபிரகாம் வானத்தை அண்ணார்ந்து பார்த்தபோது லட்சக்கணக்கான நட்சத்தி ரங்கள் மத்தியிலே விடிவெள்ளி நட்சத்திரமாய் நின்று கொண்டிருக்கிற இயேசுவை கண்டு இருந்திருக்கக்கூடும்.

உங்கள் பிதாவாகிய ஆபிரகாம் என்னுடைய நாட் களைக் காண வாஞ்சையாயிருந்தான். கண்டு களிகூர்ந் தான் என்று இயேசு சொல்லி இருக்கிறாரே (லூக் 8:50) இயேசு ஆபிரகாமின் குமாரன் என்று அழைக்கப்பட்ட போதிலும் (மத் 1:1) ஆபிரகாமுக்கு இயேசுவை கைகளிலே ஏந்தும் பாக்கியம் கிடைக்கவில்லை.

அதைத் தொடர்ந்து யாக்கோபுக்கு கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்பாடு இருந்தது. தன் குமாரனை ஆசீர்வதிக்

கும்போது ''சமாதானக் கர்த்தர் வருமளவும்'' என்று இயேசு கிறிஸ்துவைப் பற்றி தீர்க்கதரிசனமாய் சொல்லி யூதாவை ஆசீர்வதித்தார் (ஆதி 49:10). ஆனாலும் யாக்கோபின் நாட்களில் இயேசு பிறக்கவில்லை.

அதைப்போல நீங்கள் வரிசையாய் பார்த்துக் கொண்டு வருவீர்களானால் ஒவ்வொரு பரிசுத்தவான்களும் இரட்சகரான இயேசுவை தங்கள் கைகளில் ஏந்தும்படி பிரியப்பட்டார்கள்.

மோசே தன்னைப்போல ஒரு தீர்க்கதரிசி எழும்ப போவதை தனது ஆகமங்களில் எல்லாம் எழுதி வைத்தார். ஆசரிப்புகூடாரம், பஸ்கா பண்டிகை, பலவித பலிகள், ஞான கன்மலை எல்லாம் இயேசுவுக்கு நிழலாட்டமாய் இருந்தது. மோசே பெரிய அற்புதங்களைச் செய்தும் இஸ்ரவேலரை வழி நடத்தியும்கூட இயேசுவை தன் கைகளில் ஏந்தும் பாக்கியம் கிடைக்காமல் தன் ஓட்டத்தை முடித்துக்கொண்டார்.

புறஜாதிகளின் மத்தியில் எழும்பிய பிலேயாம் இயேசுவின் நாட்களைக் காண வாஞ்சையாய் இருந்தார். ஒரு நட்சத்திரம் யாக்கோபிலே இருந்து உதிக்கும், ஒரு செங்கோல் இஸ்ரவேலிலிருந்து எழும்பும். அவரைத் தரிசிப்பேன் என்றெல்லாம் பிலேயாம் வாஞ்சித்தார் (எண் 24:17). ஆனாலும் அவன் நாட்களில் இயேசு பிறக்கவில்லை.

ஏசாயா தீர்க்கதரிசியைப் பாருங்கள். இயேசுவினுடைய பிறப்பு வளர்ப்பு எல்லாம் மிக துல்லியமாய் தீர்க்கதரிசனமாய் உரைத்தார். ''இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப்பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள்'' (ஏசா 7:14). ''நமக்கு ஒரு பாலகன் பிறந்தார், நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும்; அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமை

யுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப் பிரபு என்னப் படும்'' (ஏசா 9:6).

அத்தனை அழகான தீர்க்கதரிசனம் உரைத்த ஏசாயா வுக்கு இயேசுவைத் தூக்குகிற பாக்கியம் கிடைக்கவில்லை

யோபுவுக்குத்தான் கிறிஸ்துவின் மேல் எவ்வளவு அன்பு! ''அவரை நானேப் பார்ப்பேன்; அந்நிய கண்கள் அல்ல, என் கண்களே அவரைக் காணும்; இந்த வாஞ்சை யால் என் உள்ளிந்திரியங்கள் எனக்குள் சோர்ந்துபோகி றது'' என்று சொல்லி தன் ஏக்கத்தை வெளியிட்டார் (யோபு 19:27).

கர்த்தரோடு நித்திய உடன்படிக்கை செய்த தாவீ துக்கு (1 நாளா 14:7) இயேசுவை கைகளில் ஏந்தும் பாக் கியம் கிடைக்கவில்லை.

மீகா தீர்க்கதரிசி இயேசு எந்த இடத்தில் பிறப்பார் என்பதை எல்லாம் மிக துல்லியமாக தீர்க்கதரிசனம் உரைத்தார். ''எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே, நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந் தாலும், இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலி ருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார்; அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது என்று உரைத்தார்'' (மீகா 5:2). ஆனாலும் அவருடைய நாட்களில் இயேசு பிறக்கவில்லை.

இப்படியாக வேதத்திலுள்ள பகுதிகளை எல்லாம் நாம் சொல்லிக்கொண்டே போகலாம். எத்தனையோ பரிசுத்த வான்கள், எத்தனையோ ராஜாக்கள், எத்தனையோ ஆசாரி யர்கள், எத்தனையோ தீர்க்கதரிசிகள் தங்களுடைய நாட் களில் இயேசு பிறக்க மாட்டாரா? தங்கள் கண்கள் காணாதா? தங்களுடைய கைகளில் அவரை ஏந்த மாட் டோமா? என்று ஆவலோடு எண்ணி, ஏங்கி, எதிர்பார்த்து தங்கள் நாட்களை முடித்தார்கள்.

ஆனால் அவர்களுக்கெல்லாம் கிடைக்காத பாக்கியம் சிமியோனுக்குக் கிடைத்தது. இயேசுவை கைகளில் ஏந்தியபோது இரட்சணியத்தை என் கண்கள் கண்டது. மற்றவர்களின் கண்கள் காணவில்லை. ஆனல் என் கண்களுக்கு அந்த பாக்கியம் கிடைத்தது! சிமியோனுடைய உள்ளம் எவ்வளவு மகிழ்ந்திருக்கும். என்பதை என்னல் வர்ணித்து சொல்ல இயலவில்லை.

## முதலாம் இசை நாற்காலி!

இசை நாற்காலி என்ற மியூசிக்கல் சேர் விளையாட்டு உங்களுக்குத் தெரியுமா? பள்ளிக்கூடங்களில் அந்த விளையாட்டுக்களை எல்லாம் மாணவர்கள் விளையாடுவதை பார்த்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். இசைபோட்டியில் பாடல் பாடிக் கொண்டிருக்கும்போது அநேகம்பேர் நாற்காலியைச் சுற்றிலும் ஓடிக்கொண்டிருப்பார்கள் பதினொருபேர் ஓடுவார்கள் என்றால் பத்து நாற்காலிகள் தான் அங்கே போடப்பட்டிருக்கும். இசை பாடல் நின்றவுடனே ஓடிப்போய் உட்காருவார்கள். பத்து பேருக்கு இடம் கிடைக்கும். ஒருவர் வெளியே போய் விடுவார் அதன் பின்பு ஒரு நாற்காலியை எடுத்து விடுவார்கள். ஒன்பது நாற்காலிகள் இருக்கும். பத்துபேர் அதைச் சுற்றிலும் ஓடுவார்கள்.

இப்படியாக ஒவ்வொருவராக வெளியே போய்க் கொண்டிருப்பார்கள். ஒவ்வொரு நாற்காலிகளாய் எடுக்கப்பட்டுக் கொண்டே இருக்கும். கடைசியாக ஒரு நாற்காலியைச் சுற்றி இரண்டுபேர் நீண்டநேரம் ஓடுவார்கள். இசையும் நீண்ட நேரம் பாடிக்கொண்டிருக்கும். திடீரென்று இசை நின்ற உடனே இரண்டுபேர் விழுந்தடித்துபோய் நாற்காலியில் உட்காருவார்கள். ஆனல் கடைசியில் நாற்காலியில் உட்காரும் கடைசி நபரே பரிசை பெறுவார். அந்த கடைசி நபர் பரிசை பெறும் போது அவருடைய உள்ளத்தில் ஒரு பெரிய மகிழ்ச்சி உண்

டாகும். தனக்கு முன்பாக ஓடியும் நாற்காலி கிடைக்காமல் வெளியே நிற்கும் நபரைப் பார்க்கும்போது அவருடைய உள்ளம் என்ன நினைக்கும்?

அதுபோலதான் ஆதியாகமத்திலிருந்து பல பரிசுத்தவான்கள் அந்த ஓட்டத்தில் ஓடியும் அவர்களுக்கு பரிசு பொருளாகிய இயேசுவை கைகளில் ஏந்தும் பாக்கியம் கிடைக்காமல் இருக்கும்போது சிமியோனுக்கு அந்த பெரிய பாக்கியம் கிடைத்தது. ஆகவே சிமியோனுடைய சந்தோஷம் அளவிடப்பட முடியாமல் இருந்தது ஆச்சரியமில்லை.

இயேசுகிறிஸ்துவை அடையாளம் கண்டுக்கொண்ட சிமியோன் தன் கைகளை மரியாளுக்கு நேராக நீட்ட மரியாளும் முன் பின் அறியாமலிருந்த சிமியோனை தேவ மனுஷன் என்று கண்டு வயது முதிர்ந்த அவரிடம் குழந்தை இயேசுவைக் கொடுத்தாள்.

சிமியோன் அந்த குழந்தையை கைகளில் ஏந்துகிறார். அந்த காட்சியை என் மனக்கண்களுக்கு முன்பாக கொண்டு வந்தேன். நானும் அந்த ஆலயத்தில் சிமியோனோடு ஒரு ஆளாய் நின்று கொண்டிருப்பதைபோல உணர்ந்தேன் சிமியோன் குழந்தையை ஏந்தி இரட்சணியத்தை என் கண்கள் கண்டதே என்று சொல்லும்போது என் உள்ளமும் ஆனந்த பரவசம் அடைகிறது.

சிமியோனைப் பார்க்கிறேன். என் உள்ளம் பதை பதைத்து சொல்லுகிறது, ''சிமியோனே, பத்திரமாக குழந்தையை கைகளில் ஏந்திக்கொள். நீ உன் கையை கீழே விட்டு விடாதே. உன் கைகளில் ஏந்தியிருக்கிற குழந்தையில்தான் எங்கள் நம்பிக்கை எல்லாம் இருக்கிறது. அவர்தான் எங்களுடைய நன்மை, அவர்தான் எங்களுடைய அன்பு இரட்சகர், அவர்தான் எங்களுக்காக பூமியிலே இறங்கி வந்தவர்.''

''சிமியோனே, உன் கைகளில் ஏந்தியிருக்கிற குழந்தை சாதாரணமான குழந்தை அல்ல. முழு உலகத்துக்கும் பிதாவால் கொடுக்கப்பட்ட ஈவாகும். அவர் எங்கள் பாவ பரிகாரி எங்கள் சாபங்களை நீக்குகிறவர். வியாதிகளை சுமக்கிறவர். இரட்சணியத்தை ஏந்தி இருக்கிற சிமியோனே மிக ஜாக்கிரதையாய் அவரை வைத்துக்கொள் ளும்!''

சகோதரனே, சகோதரியே, இன்று ஆண்டவர் அந்த இரட்சணியத்தை உங்கள் கைகளில் கொடுத்திருக்கிறார். சுவிசேஷமாகிய இரட்சணியத்தை உங்கள் கைகள் ஏந்தி இருக்கிறது. இவ்வளவு பெரிய தேசத்தில் கோடி கோடி மக்கள் இருக்கும்போது அவருடைய இரட்சணி யத்தைச் சுமக்கும்படி நீங்கள்தான் அழைக்கப்பட்டிருக் கிறீர்கள். ஆண்டவர் உங்களைத் தெரிந்துகொண்டு அந்த இரட்சிப்பைக் கொடுத்திருக்கிறார்!

மரியாள் இயேசுவை சிமியோன் கைகளில் கொடுத் தாள். இன்றைக்கு பிதாவானவர் இயேசுவை உன் கை களில் கொடுத்திருக்கிறார். இரட்சணியத்தைக் காண்கிற பாக்கியத்தை உனக்குத் தந்திருக்கிறார்.

கிறிஸ்து உன்னில் உருவாகும்படி எத்தனை பரிசுத்த வான்கள் உனக்காக கர்ப்ப வேதனைப்பட்டார்கள்! அந்த இரட்சணியத்தை கீழே போட்டுவிடாதே. உன் பார்வை யிலிருந்து தவறிவிடாதே. இயேசுவை ஏந்தி இருக்கிற நீ, அந்த இயேசுவை ஆயிரமாயிரமான மக்களுடைய உள் ளத்தில் வைக்க வேண்டும். இந்த தலைமுறையினருக்கு இயேசுவை அறிவிக்க வேண்டிய பொறுப்பை இந்த தலை முறையிலே பிறந்த உன்னிடம்தான் கொடுத்திருக்கிறார்.

## யார் இந்த இரட்சணியம்?

நீ ஏந்தியிருக்கிற இரட்சகர் யார்? சிமியோன் சொல் கிறார் அவர் புறஜாதிகளுக்கு பிரகாசிக்கிற ஒளி. தேவ னுடைய ஜனமாகிய இஸ்ரவேலருக்கு மகிமை. சகல ஜனங்

சனுக்கு முன்பாக ஆயத்தம்பண்ணின இரட்சணியம். எத்தனை அருமையாய் சிமியோன் விவரிக்கிறார் பாருங்கள்.

தேவபிள்ளையே, நம் அருமை ஆண்டவருடைய பெயர் இரட்சகர். அவர்தான் இரட்சகர். ஏனென்றால் அவர் ஜனங்களை இரட்சிக்க வந்தவர். மத்தேயு 1:21 சொல்லுகிறது, ''அவருக்கு இயேசு என்று பேரிடுவீர்கள் ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்'' (மத் 1:21).

யோவான் 3:17 சொல்லுகிறது, ''உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்''

(யோவா 3:17).

இயேசுவையல்லாமல் வேறு இரட்சிப்பு இல்லை. வானத்தின் கீழே பூமியின் மேலே இரட்சிக்கப்படுவதற்கு இயேசுவின் நாமமேயல்லாமல் வேறு ஒரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை.

இயேசு இல்லாமல் பாவ மன்னிப்பு இல்லை. இயேசு இல்லாமல் மீட்பு இல்லை. இயேசு இல்லாமல் இரட்சிப்பு இல்லை. இதை உலகம் திட்டமாய் அறிந்து கொள்ளட்டும். தேவபிள்ளையே, இதை தெளிவாய் ஜனங்களுக்கு எடுத்துக்கூறு. இரட்சகரை உன் கண்கள் கண்டிருக்கிறது அல்லவா?

இயேசுகிறிஸ்துவின் முதல் வருகையைக் குறித்து தியானிக்கும்போதெல்லாம் அவருடைய இரண்டாவது வருகையைக் குறித்து நாம் மறந்துபோய் விடக்கூடாது. ஏனென்றால் இரண்டாம் வருகையின் கடைசி நேரங்களில் நாம் வந்திருக்கிறோம்

எந்த ஒரு மனிதன் இரண்டாம் வருகையைக் குறித்து கொஞ்சமும் அக்கறையில்லாமல் முதலாம் வருகையின்

மகிழ்ச்சியிலே திளைத்துத் தன்னை மறந்து கொண்டிருக்கிறானே அவன் பரிதாபத்திற்குரியவன் என்பதை நாம் மறந்துபோய் விடக்கூடாது. நாம் வந்திருக்கிற இந்த நாட்கள் மிக முக்கியமான நாட்சள்! வரலாறு முடிவடையப்போகிற நாள். இயேசு வரப்போகிற நாள். ஆகவே நாம் இரண்டாம் வருகையைக் குறித்து சிந்தித்துத்தான் ஆகவேண்டும்!

கிறிஸ்துவினுடைய இரண்டாம் வருகையை இரண்டு இசை நாற்காலி பந்தயத்திற்கு ஒப்பிட்டு சொல்லலாம். முதல் இசை நாற்காலி ஆதாமில் தொடங்கி சிமியோனோடு முடிந்தது. ஏதேன் தோட்டத்தில்தான் கர்த்தர் அந்த இசையை ஆரம்பித்து வைத்தார். மேசியா பிறப்பார் என்ற வாக்குத்தத்தம் அங்குதான் கொடுக்கப்பட்டது.

## இரண்டாம் இசை நாற்காலி!

ஆனால் இப்பொழுதோ நாம் இரண்டாம் இசை நாற்காலி பந்தயத்தில் நின்று கொண்டிருக்கிறோம். இந்த பந்தயம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது? ஒலிவமலை சாரலிலே ஆரம்பிக்கப்பட்டது. இயேசு பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது ஆரம்பிக்கப்பட்டது.

கலிலேயா மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள் (அப் 1:11).

அப்படியே மறுபடியும் வருவார் என்ற வாக்குத்தத்தத்தோடு கர்த்தர் இரண்டாம் இசை நாற்காலி நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தார். ''அப்படியே மறுபடியும் வருவார்'' என்று எதிர்பார்த்து சீஷர்கள் ஆவலோடு ஓட ஆரம்பித்தார்கள்.

அன்றுமுதல் சீஷர்கள் ஒருவரை ஒருவர் வாழ்த்தும்போது ''மாரநாதா, மாரநாதா'' என்று வாழ்த்தினார்கள். மாரநாதா என்ற வார்த்தைக்கு இயேசு வருகிறார் என்பது அர்த்தமாகும். அந்த வார்த்தையைக் கேட்கும்போதெல்லாம் அவர்களுக்குள் ஒரு மகிழ்ச்சி, ஒரு சந்தோஷம். இயேசுவின் இரண்டாவது வருகையிலே மகிமையின் ராஜாவாய் அவரைத் தரிசிப்போம் என்கிற எதிர்பார்ப்பு இருந்தது.

கிறிஸ்துவினுடைய ஒவ்வொரு சீஷர்களும் இரத்த சாட்சியாய் மரிக்கும்போது கர்த்தருடைய வருகை சமீபம் என்கிற நம்பிக்கையோடும் எதிர்பார்ப்போடும் மரித்தார்கள். ஆனால் அவர்களின் நாட்களில் இயேசு வரவில்லை.

அப்போஸ்தலனாகிய யோவான் திட்டமாய் அவருடைய வருகை வரை உயிரோடிருப்பார் என்று மற்ற சீஷர்கள் நம்பினார்கள். ஏனென்றால் இயேசுதாமே நான் வருமளவும் யோவான் இருக்க எனக்குச் சித்தமானால் என்று சொல்லியிருந்தார் ஆகவே யோவான் மரிப்பதில்லை என்ற பேச்சு சீஷர்களுக்குள்ளே பரம்பிற்று

(யோவான் 21:23).

அப்போஸ்தலனாகிய யோவான்கூட வெளிப்படுத்தின விசேஷத்தை முடிக்கும்போது ஆமென் கர்த்தராகிய இயேசுவே வாரும் என்ற அழைப்போடு முடிக்கிறதைக் காணலாம் (வெளி 22:20). ஆனாலும் கர்த்தர் யோவான் நாளில் வரவில்லை

அதன் பின்பு அப்போஸ்தலனாகிய பவுலின் வாழ்க்கையை வாசித்துப் பாருங்கள். அவருக்கும்கூட இயேசுவின் வருகையிலே காணப்பட மிகுந்த ஆசையாய் இருந்தது. இயேசுவின் வருகையின் நாளுக்காய் ஆவலோடு காத்திருந்தார். ''பின்பு உயிரோடிருக்கும் நாமும்'' என்று தன்னையும் தெசலோனிக்கேயரோடு இணைத்துக்கொண்டு கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்

களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட ஆவலாயிருந்தார் (I தெச 4:17) ஆனாலும் அப்போஸ்தலனாகிய பவுலின் நாளில் இயேசு வரவில்லை.

பேதுரு இதைக்குறித்து, "தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி கிறிஸ்து தமது வாக்குத்தத்தத்தைக்குறித்து தாமதியாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று பொறுமையுள்ளவராய் இருக்கிறார்" என்று விளக்கம் தந்தார் (II பேதுரு 3:9). ஆயினும் பேதுருவினுடைய நாட்களில் இரண்டாம் வருகை இருக்கவில்லை.

அதன் பின்பு திருச்சபையானது பாடுகளின், உபத்திரவங்களின் வழியாய் கடந்து சென்றது. ரோமாபுரியை ஆண்ட நீரோ மன்னன் திருச்சபையினரை சித்திரவதைப் படுத்தி கொடுமைப்படுத்தினான். அந்த வேளையில் எல்லாம் ஒவ்வொரு ஊழியர்களும் விசுவாசிகளும் இயேசுவினுடைய வருகையை ஆவலோடு எதிர்பார்த்தார்கள். ஆனால் அவர்கள் நாளில் இயேசு வரவில்லை

பதினாரும் நூற்றாண்டில் திருச்சபையில் பல சீர்திருத்தங்களைக் கொண்டு வந்த மார்ட்டின் லுத்தர் கிறிஸ்துவினுடைய வருகையைக் குறித்து அதிகமாய் பிரசங்கித்தார் ஆனால் அவருடைய நாளில் இயேசு வரவில்லை. அதன் பின்பு பின்னி, சால்ஸ், வெஸ்லி, டி எல் மூடி போன்ற பக்தர்கள் எல்லாம் வருகையைக் குறித்து பிரசங்கித்தார்கள் தங்கள் நாளில் கிறிஸ்துவினுடைய வருகை இருக்காதா என்று எண்ணி ஏங்கினார்கள். ஆனால் அவர்களுடைய நாளில் இரண்டாம் வருகை இருக்கவில்லை. ஆவலோடு எதிர்பார்த்து ஏங்கி நின்றுவிட்டு தங்கள் ஓட்டத்தை முடித்துக்கொண்டார்கள்

## நமது நாட்கள் முக்கியமானவை!

ஆனால் நாம் இப்பொழுது மிக முக்கியமான நாளுக்குள் வந்திருக்கிறோம். வருகையின் அடையாளங்கள் எல்லாம் நிறைவேறி இருக்கும் நாளுக்குள் வந்திருக்கி

றோம். லோகத்திலுள்ள ஒவ்வொரு தீர்க்கதரிசனங்களும் கிறிஸ்துவின் வருகை சமீபமாய் இருக்கிறது என்று நமக்கு உணர்த்திக் கொண்டே இருக்கிறது.

மாத்திரமல்லாமல், கர்த்தர் இந்த நாளில் ஒரு பெரிய எழுப்புதலின் பின்மாரியை ஊற்றி தாகமுள்ளவர்களை அபிஷேகம் பண்ணிக் கொண்டிருக்கிறார். எங்கு எல்லாம் பார்த்தாலும் வருகையைக் குறித்த பிரசங்கத்தைதான் நாம் கேட்கிறோம்.

இசை நாற்காலியின் இசை தொடர்ந்து பாடிக் கொண்டே இருக்கிறது. இந்த இசை நாற்காலியின் ஓட்டத்தில் பலவகையான விசுவாசிகள், பல வகையான சபைகள் பங்கெடுத்து ஓடிக் கொண்டிருக்கின்றன. சி எஸ் ஐ சபை, லுத்தரன் சபை, மெதடிஸ்ட் சபை, மார்த்தோமா சபை, பாப்டிஸ்ட் சபை, இரட்சண்ய சபை, பல்பல பெந்தெகொஸ்தே சபைகள் எல்லாம் இந்த ஓட்டத்தில் கலந்துகொண்டு ஓடிக்கொண்டிருக்கிறார்கள். சிலர் நாங்கள் தான் வருகையிலே போவோம் என்று மார் தட்டுகிறார்கள்.

எப்பொழுது இசை நாற்காலியின் இசை நிற்குமோ தெரியவில்லை. எப்போது எக்காளம் ஊதுமோ தெரிய வில்லை. எப்போது ஆண்டவருடைய இரகசிய வருகை இருக்கும் என்றும் ஒருவருக்கும் தெரியாது!

இன்றைக்கு உலகத்தில் எத்தனை சிமியோன்கள் இருக் கிறார்கள் என்பதை தேவ எக்காளம் தொனிக்கும்போது தான் நாம் அறிந்துகொள்ளுவோம். முன்பு இருந்த சிமி யோன் இயேசுவை கைகளிலே ஏந்தினான். இனி நாம் இயேசுவை மகிமையின் ராஜாவாய் கண் குளிர கண்டு அவரை அணைத்துக்கொள்ளுவோம். நமக்காக முள்முடி சூட்டப்பட்ட அவரை, கைகளிலும் கால்களிலும் ஆணி கள் கடாவப்பட்ட அவரை முகமுகமாய் தரிசிப்போம்.

இரண்டாவது இசை பந்தயம் முடியும் கடைசி நேரத்திற்குள் நாம் வந்திருக்கிறோம்

மீண்டும் சிமியோனைக் காண வாருங்கள். சிமியோனுக்கு எப்படி இயேசுவை ஏந்தும் பாக்கியம் கிடைத்தது என்பதை சிந்தித்துப் பாருங்கள். சிமியோனின் குணநிசயம் நம் இருதயத்தை கவர்கிறது. லூக் 2:25-ம் வசனத்தை வாசித்துப் பாருங்கள். சிமியோனுடைய குணநிசயத்தை அறிந்துகொள்ளலாம். அவன்:

1) நீதியும்; 2) தேவபக்தி உள்ளவனும்; 3) இஸ்ரவேலின் ஆறுதல் வரக்காத்திருக்கிறவனும் இருந்தான். 4) அவன்மேல் பரிசுத்த ஆவி இருந்தார்.

தேவனுடைய பிள்ளையே, கிறிஸ்துவினுடைய இரண்டாவது வருகையிலே நாம் காணப்படுவதற்கு சிமியோனிலிருந்த இந்த நான்கு குணநிசயம் நம்மில் காணப்படுகிறதா என்பதை நாம் ஆராய்ந்து பார்ப்போமாக!

1. நீதியுள்ளவன்:-

சிமியோன் நீதியுள்ளவன் என்று வேதம் சொல்லுகிறது. தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடியவர் நீதி உண்டாக தன்னைச் சுத்திகரித்துக் கொண்டவர்!

வேதத்தை ஆராய்ந்து பார்க்கும்போது நமக்கு நீதியைத் தருகிறவர் கர்த்தர் ஒருவரே என்பதை அறிகிறோம். நம்முடைய நீதி எல்லாம் அழுக்கான கந்தையைப்போல்தான் இருக்கிறது. நீதிமான் ஒருவனும் இல்லை ஒருவனாகிலும் இல்லை.

இயேசுக்கிறிஸ்து நம்முடைய அழுக்கான கந்தையை எடுத்துவிட்டு தன்னுடைய நீதியின் வஸ்திரத்தைத் தருகிறவர். இரட்சிப்பின் சந்தோஷத்தைத் தருகிறவர். துதியின் ஆடையை தருகிறவர். ஆம், அவரே நம்மை நீதிமானாக மாற்றுகிறவர்.

நாம் கல்வாரி சிலுவையண்டை வந்து ' ஐயா, நான் ஒரு பாவி என்னிலே நீதி ஒன்றுமில்லை நீர் எனக்காக பாவமானீர் என்னுடைய பாவ பாரங்களைச் சிலுவையிலே சுமந்தீர் உம்மை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன்'' என்று சொல்லும்போது நம் அருமை ஆண்டவர் தம்முடைய நீதியின் வஸ்திரத்தை நமக்குத் தரிப்பிக்கிறார்.

நமக்கு நீதியின் வஸ்திரத்தைத் தரிப்பதற்கு இயேசு பட்ட பாடுகளை நினைவு கூருங்கள் அவருடைய வஸ்திரம் எல்லாம் அவருடைய இரத்தத்தினால் தோய்ந்ததாய் இருந்தது. ஆம், நமக்கு பரிசுத்த வஸ்திரத்தை தரிக்கும்படி நம்முடைய பாவ அக்கிரமங்களை தன்மேல் சுமந்துகொண்டார்.

கிறிஸ்து தம்முடைய மகிமையின் வஸ்திரத்தை நமக்குக் கொடுத்திருக்கிறார் நீதியை தரிபித்திருக்கிறார். அந்த வஸ்திரத்தை ஒருபோதும் நாம் கறைபடுத்தி விடக்கூடாது மகனே என் வஸ்திரத்தை கறைபடுத்தி விடாதே. இது நீதியின் வஸ்திரம். என்னுடைய வருகையிலே என்னைச் சந்திப்பதற்கு ஆயத்தப்படு நீ தூய்மையுள்ளவனாய் வாழ வேண்டுமென்று கர்த்தர் சொல்லுகிறார்.

## 2 தேவ பக்தி உடையவன்:-

சிமியோனின் இரண்டாவது குணாதிசயம் அவன் தேவ பக்தியுடையவன் என்று வேதம் சொல்லுகிறது.

பக்தியுள்ளவனைக் கர்த்தர் தமக்கென்று தெரிந்து கொண்டார் என்று அறியுங்கள் (சங் 4:3).

ஒருவன் எந்த மார்க்கத்தில் இருந்தாலும் உண்மையாய் அவனுடைய உள்ளத்தின் ஆழத்தில் உண்மையான தேவனைக் கண்டுகொள்ள வேண்டுமென்ற பக்தி இருக்கும் என்றால் அவனுக்குக் கர்த்தர் தன்னை வெளிப்படுத்த ஆவலுடையவராய் இருக்கிறார்.

சாது சுந்தர்சிங் சிறுவயதிலேயே பல தத்துவ மார்க்கங்களை அறிந்து உண்மையான தெய்வத்தை கண்டு கொள்ள வேண்டுமென்ற ஆவல் கொண்டிருந்தார். அவருக்குள்ளே நல்ல பக்தி இருந்தது. ஆகவே ஒரு நாள் அதிகாலை வேளையில் கிறிஸ்துதாமே அவருக்கு தன்னை வெளிப்படுத்தி நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் என்னையல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் என்று சொல்லி தன்னை வெளிப்படுத்தினார். தேவ பக்தி உள்ளவர்களை கர்த்தர் தமக்கென்று தெரிந்து கொள்ளுகிறார்.

ஒரு நாள் என்னுடைய வீட்டிற்கு ஒரு தாசில்தார் வந்திருந்தார். அவருக்கு இயேசுகிறிஸ்துவைக் குறித்து நான் சொல்ல ஆரம்பித்ததும் அவர் தன் பாக்கெட்டுக்குள் கை விட்டு ஒரு போட்டோ ஒன்றை எடுத்து என்னிடம் காண்பித்தார்.

அது என்ன போட்டோ தெரியுமா? அவர் மலைக்கு போவதற்கான மாலையோடு எடுத்த போட்டோ அது. அதைக் காட்டிய நோக்கம் என்ன தெரியுமா? உன் இயேசுவை உன்னிடத்தில் வைத்துக்கொள் என் பக்தியை நான் என்னிடத்தில் வைத்துக்கொள்கிறேன் இயேசுவைப் பற்றி பேசாதே என்பதே அதனுடைய அர்த்தமாகும். என்னிடத்தில் அந்த படத்தின் மூலமாய் அதை காண்பித்தார்.

அதைப் பார்த்தவுடன் நான் மிகுந்த சந்தோஷமாய் அவரிடம் ஐயா இந்த போட்டோவைப் பார்க்கும்போது மிகுந்த சந்தோஷமாய் இருக்கிறது. ஏனென்றால் என்னுடைய வேதத்தில் உங்களைப் பற்றி எழுதி வைத்திருக்கிறது என்றேன்.

அவர் என்னிடம், ''என்னைக் குறித்து உங்களுடைய வேதத்தில் என்ன எழுதி வைத்திருக்கிறது?'' என்று கேட்டார். நான் சொன்னேன் பக்தியுள்ளவனை கர்த்தர் தனக்

கென்று தெரிந்துகொண்டார் என்று எழுதியிருக்கிறது. நீங்கள் பக்தியுள்ளவர் ஆகையால் என்றாவது ஒரு நாள் இயேசுவிடம் வந்து விடுவீர்கள் என்றேன்.

சில மாதங்களுக்கு பின்பு அவரை ஆஸ்பத்திரியிலே சந்தித்தேன். அவரைச் சந்தித்தபோது எனக்கு ஆச்சரியமாய் இருந்தது. ஏனென்றால் அவர் முற்றிலும் மாற்றப்பட்டு இயேசுவை உறுதியாய் பற்றி பிடித்திருந்தார். அருமையாய் ஜெபித்தார். மரண தருவாயில் தன்னை முற்றிலும் கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்தவராய் இரட்சிக்கப்பட்டவராய் கடந்து சென்றார்

3. காத்திருந்தார்:-

சிமியோன் காத்திருந்தார். இஸ்ரவேலுக்கு ஆறுதல் வர காத்திருந்தார் என்று வேதம் சொல்லுகிறது. வயது முதிர்ந்தவரையிலும் பொறுமையோடும், விடா நம்பிக்கையோடும் காத்திருந்தார்.

ஒருவேளை சாத்தான் வந்து சொல்லி இருந்திருக்கக் கூடும். நீ ஆண்டவருக்காகக் காத்திருந்து என்ன பிரயோஜனம்? இயேசு பிறக்க மாட்டார். இன்னும் அதிக காலம் செல்லக்கூடும் என்றெல்லாம் சொல்லி அதைரியப்படுத்தி இருந்திருர்கக்கூடும்.

சிலருக்கு காத்திருக்க பிரியம் இல்லை. அவசரப்பட்டு விடுகிறார்கள் உங்களுக்கு தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். கடந்த அக்டோபர் மாதம் 28-ம் தேதி இரவு இயேசு வருகிறார் என்று சொல்லி ஒரு கூட்டத்தார் பெரிய ஆர்ப்பாட்டம் செய்தார்கள்.

ஆனால் வேதத்தில் தெளிவாய் சொல்லியிருக்கிறது. மனுஷகுமாரன் வரும் நாளையோ நாழிகையோ ஒரு மனுஷனும் அறியான். பரலோகத்திலிருக்கிற தேவதூதர்களும் அறியார்கள். சிலர் இந்த வசனத்தை வாசிக்காமல் காத்திருக்க மனமில்லாமல் அவசரப்பட்டு நாளையும்

நாழிகையையும் குறித்துக்கொண்டு இந்த நாளில்தான் இயேசு வருவார் என்று சொல்லி விடுகிறார்கள்

தேவனுடைய பிள்ளைகளாகிய நாமோ எப்போதும் அவருடைய வருகைக்காக ஆவலோடு காத்திருக்க வேண்டும் சோர்ந்து போகாமல் காத்திருக்கும்போது நிச்சயமாகவே நம்முடைய எதிர்பார்ப்பு வீண்போகாது. சிமியோன் இஸ்ரவேலின் ஆறுதல் வரக் காத்திருந்தான்.

**4. பரிசுத்த ஆவியானவர் அவன் மேலிருந்தார்:-**

சிமியோனைக் குறித்து வேதம் சொல்லுகிறது அவர் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பெற்றவராய் இருந்தார் மாத்திரமல்ல தேவ ஆவியானவர் அவரை அருமையாய் வழி நடத்துகிறவராய் இருந்தார்

இந்த நாள் பரிசுத்த ஆவியின் பின்மாரி ஊற்றப் படுகிற நாட்கள். தாகமுள்ள ஒவ்வொரு பாத்திரத்தையும் அருமை ஆண்டவர் ஆவியினாலும் மகிமையினாலும் நிரப்புகிற நாட்கள் யோவேல் தீர்க்கதரிசி மூலமாய் ஒரு பின்மாரியையும், முன்மாரியையும் கட்டளையிடுவேன் என்று சொன்ன ஆண்டவர் இந்த கடைசி நாளில் மாம்சமான யாவர்மேலும் தன்னுடைய ஆவியை ஊற்றிக் கொண்டிருக்கிறார்

சிந்தித்துப் பாருங்கள். இருபத்தி ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு நம்முடைய திருச்சபை பரிசுத்த ஆவியானவரைக் குறித்து கேலி செய்து கொண்டிருந்தது. பரிசுத்த ஆவியானவர் என்றால் ஏதோ ஒரு பெந்தெகொஸ்தே இயக்கத்திற்குரிய ஒரு காரியம் என்று எண்ணினார்கள். பெந்தெகொஸ்தேகாரர்கள் ஆலயத்திற்குள் வரக்கூடாது; அந்நிய பாஷையில் பேசுகிறவர்களை பிடித்து தூக்கி வெளியே போடுங்கள்; தவளையின் ஆவியால் கத்திக் கொண்டிருக்கிறார்கள் என்றெல்லாம் பேசிய நாட்கள்.

ஆனால் இன்றைக்கோ ஆவியானவருக்கு சபையிலே எத்தனை அருமையான வரவேற்பு. நம்முடைய திருச்சபை

களில் மாத்திரமல்ல, கத்தோலிக்க திருச்சபைகளிலும்கூட கர்த்தர் நல்ல அபிஷேகத்தையும் எழுப்புதலையும் ஊற்றிக் கொண்டிருக்கிறார்.

தந்தை பெர்க்மான்ஸ் போன்ற ஏராளமான கத்தோலிக்க குருமார்களை எழுப்பியிருக்கிறார். கன்னியாஸ்திரிகளின் மேல் தேவ ஆவியானவரை அளவில்லாமல் பொழிந்தருளிக் கொண்டிருக்கிறார்.

சில ஆண்டுகளுக்கு முன்பு நான் ஒரு கத்தோலிக்க திருச்சபையிலே உபவாசக் கூட்டத்திற்கு போயிருந்த போது என் கண்களையே என்னால் நம்ப முடியவில்லை. அங்குள்ள கன்னியாஸ்திரிகள் எல்லாம் அந்நிய பாஷையிலே பேசி ஆவியிலே களிகூர்ந்து நடனமாடிக் கொண்டிருந்தது என்னால் மறக்க இயலாது கிறிஸ்துவை நாம் காணப்போகிற நாட்கள் சமீபித்து விட்டபடியினால் கர்த்தர் எல்லா இடங்களிலும் ஆவியானவரை பொழிந்தருளி இருக்கிறார்.

சிமியோன் இயேசுவை கைகளிலே ஏந்தி இரட்சணியத்தை என் கண்கள் கண்டது என்று சொன்னார். நாமும் எக்காளச் சத்தம் தொனிக்கும்போது இரட்சகரை கண்குளிரக் காண்போம் இமைப்பொழுதிலே மறுரூபமாக்சப்படுவோம் இயேசுகிறிஸ்துவுக்கு எதிர்கொண்டு போவோம் அவருடைய ஒவ்வொரு காயங்களாக முத்தம் செய்வோம்.

யோபு பக்தன் சொன்னார் என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும் அவர் கடைசி நாளில் பூமியின்மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன் இந்த தோல் முதலானவைகள் அழுகிபோனாலும் என் மாம்சத்திலிருந்து அவரைக் காண்பேன் அவரை நானே காண்பேன் அந்நிய கண்கள் அல்ல என்னுடைய கண்களே அவரைக் காணும் என்றார்.

இரட்சணியத்தை என் கண்கள் கண்டது. இரட்சகரை நான் காணப் போகிறேன். இயேசு சீக்கிரமாய் வரப் போகிறார்.

எல்லோரும் எழுந்து நிற்போம். அவரைக் காண இன்றைக்கு நாம் நம்மை ஆயத்தப்படுத்திக்கொள்ள வேண்டும். உங்களுடைய கண்கள் அவரைக் காண வேண்டும். நீங்கள் அவரை தரிசிக்க வேண்டும். மகிமையின் ராஜா வரப்போகிறார். கடைசி நேரத்திற்குள் நாம் வந்திருக்கிறோம்.

வேதம் சொல்லுகிறது பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும். நீதி செய்கிறவன் இன்னும் நீதி செய்யட்டும். இதோ நான் சீக்கிரமாய் வருகிறேன் என்று இயேசு சொல்லுகிறார்.

இயேசுவினுடைய முதல் பிறப்பைக் கொண்டாடுகிற நாம் இயேசு வரப்போகிறதை மறந்து போய்விடக் கூடாது. இதோ அவர் சமீபமாய் வந்திருக்கிறார்.

இயேசுவை வெறும் பாலகனாய் எண்ணிக்கொண்டு இராதிருங்கள். குழந்தை இயேசு குழந்தை இயேசு என்று வாழ் நாள் எல்லாம் சொல்லிக் கொண்டு இருந்து விடக் கூடாது. உங்களுக்குள் பிறந்திருக்கிற இயேசு வளர வேண்டும். உங்களுக்குள் கிறிஸ்துவின் சுபாவங்கள் பூரணமாய் காணப்பட வேண்டும். உங்களுக்குள் கிறிஸ்துவின் மகிமை வாசமாய் இருக்க வேண்டும். அப்போதுதான் அவர் மகிமையின் ராஜாவாய் வெளிப்படும்போது அவரை நீங்கள் தரிசிக்க முடியும்.

சிமியோனிலிருந்த அந்த நான்கு குணாதிசயங்கள் உங்களில் காணப்படுகிறதா? ஆராய்ந்து பாருங்கள். தேவனுடைய நீதி உங்களுக்கு இருக்கிறதா? தேவ பக்தி இருக்கிறதா? கர்த்தருடைய வருகைக்காக காத்திருக்கிறீர்களா? ஆவியானவரால் நிரப்பப்பட்டு ஆவியானவரால் வழிநடத்தப்படுகிறீர்களா?



## ஆவிக்குரிய நூல்கள்

Women Chil...
Hospital Quar...
Tirunelveli - 627 003.
Tamil Nadu

ஆவிக்குரிய ஜீவியத்தில் வளருவதற்கும், ஆத்துமா பெலன் கொள்வதற்கும் ஆவிக்குரிய நூல்கள் இன்றியமையாதவை.

ஏறக்குறைய 315 க்கும் மேற்பட்ட புத்தகங்களை எழுதிய சகோ. J. சாம் ஜெபத்துரை அவர்கள் இந் நூலையும் வெளியிட்டிருக்கிறார்கள்.

பதினாறு ஆண்டுகள் அரசாங்கத்தில் பணியாற்றிய அவர், தன் வேலையை ராஜினாமா செய்துவிட்டு முழுநேர ஊழியத்தில் 1985 ஆண்டு தீவிரமாக இறங்கினார். வல்லமையான மேடைப் பேச்சிலும் எழுத்து ஊழியத்திலும் ஆயிரக்கணக்கானோரை அவர் கர்த்தருக்குள் வழி நடத்தியிருக்கிறார். இவர் கர்த்தரின் எழுத்தாணி.

புத்தக ஊழியத்தை ஊக்குவியுங்கள். அனேக ஆவிக்குரிய புஸ்தகங்கள் வெளிவர ஜெபியுங்கள். கர்த்தர் உங்களை ஆசிர்வதிப்பாராக!

புஸ்தகங்கள் கிடைக்கும் இடம் :
J. சாம்ஜெபத்துரை, M.A.
50, ரெயில்வே ஸ்டேஷன் ரோடு,
கோடம்பாக்கம், சென்னை - 600 024.